நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026-ம் வருடம் மார்ச் திங்கள் 17-ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.368/2026
CNR.No.TNTS02-0001143-2026
IN
குற்ற எண்.58/2026

சக்திவேல்,
த/பெ. வேலாயுதம் ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சேர்ந்தமரம் காவல் நிலையம். ... புகார்தாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மாரிசெல்வன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

<u>உத்தரவு</u>

1. <u>மனுவின் சுருக்கம்</u> –

மனுதாரர் வழக்கின் அபிடவிட்தாரார்/வழக்கில் 3 நபர் /வாகன உரிமையாளர் ஆவேன் என்றும், தான் கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட TN 79 H 1812 என்ற பதிவெண் கொண்ட Pulsar 125 DST-1 இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்றும், மேற்படி வாகனத்தை நெருங்கிய உறவினர் என்ற அடிப்படையில் இவ்வழக்கின் 2ம் எதிரி மாடசாமி என்னிடமிருந்து வாங்கிச்சொன்றார் என்றும், மேற்படி எண் வழக்கில் மேற்படி தனக்கு பாத்தியப்பட்ட மேற்படி வாகனத்தை குற்ற செயலில் தனக்கு மைத்துனரான (மனைவியின் தம்பி) இந்த வழக்கின் 2ம் எதிரி மாடசாமி என்பவர் ஈடுபடுத்தியதாக கூறி தனது வாகனத்தை அவரிடமிருந்து கைப்பற்றி குற்ற எண். 58/2026 பிரிவுகள் 331(4), 305(a) of BNS Act பிரகாரம் பொய்யாக வழக்குப் பதிவு செய்து, மேற்படி வாகனத்தை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து வாதி போலீசார் காவல் நிலையத்தில் திறந்தவெளியில் நிறுத்தி வைத்துள்ளதால் அதன் இஞ்சின் பழுதடைந்து அதன் உதிரி பாகங்கள் இயங்க முடியாத மழை மற்றும் வெயில் போன்ற இயற்கை காரணங்களால் துருப்பிடித்து வாகனத்தை இயக்க முடியாத நிலை

ஏற்பட்டு தனக்கு பொருள் நஷ்டமும், பண கஷ்டமும் ஏற்படும் சூழ்நிலை உள்ளது என்றும், மேலும், தான் பணிக்கு செல்வதற்கு மேற்படி வாகனம் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்றும், மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகம் என் பெயரிலேயே உள்ளது என்றும், அதன் நகலை இத்துடன் இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளதாகவும், மேற்படி வாகனத்தின் தற்கால மதிப்பு சுமார் ரூ.30,000/– என்றும், மேற்படி வாகனத்தினை தன்னிடம் இடைக்காலமாக தர உத்தரவிடும் பட்சத்தில் தகுந்த ஜாமின் கொடுக்கவும், நீதிமன்றம் வேண்டும் போது விசாரணையின் போது ஆஜர் செய்யவும் தயாராக உள்ளேன் என்றும், மேற்படி வாகனத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ, அல்லது உறுமாற்றங்கள் செய்யவோ மாட்டேன் என்றும், மேற்படி வாகனத்தை தற்காலிகமாக தன்னிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்</u> –**

அரசு தரப்பில், வழக்கின் மனுதாரர் சக்திவேல் இவ்வாகனத்தின் உரிமையாளர் என்றும், மேற்படி வாகனம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்காமல் பி.ஆர்.எண். பெறாமல் உள்ளது என்றும், மேற்படி வாக்கின் சொத்தை விரைவில் பி.ஆர்.எண் பெறப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3. தீர்வு</u> –**

வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, மனுதாரர் இவ்வழக்கின் வாகன உரிமையாளர்/3ம் நபர் ஆவார். இந்த வழக்கானது U/s 331(4), 305(a) of BNS Act –ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட சொத்தான TN 79 H 1812 என்ற பதிவெண் கொண்ட Pulsar இருசக்கர வாகனம் பி.ஆர்.எண்.130/2026 பிரகாரம் பெறப்பட்டு நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பது தெரிய வரும் நிலையிலும், மனுதாரர் தரப்பில் மேற்படி வாகனத்தின் ஆர்சி புத்தகத்தின் நகலை தாக்கல் செய்துள்ள நிலையிலும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மேலும் மேற்படி வாகனத்தை தொடர்ந்து இயக்காவிட்டால் அதன் உதிரி பாகங்கள் சேதமடைந்துவிடும் என்பது தெரிய வரும் நிலையிலும், தக்க ஜாமீன்தாரர் அடிப்படையில் மனுதாரரின் மேற்படி பொருளை

மனுதாரரிடம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய ***Sunderbhai Ambalal Desai Vs. State of Gujarat*** உத்தரவின்படியும், மனுதாரர் வசம் அவர் மனுவில் கோரியுள்ள மேற்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி பி.ஆர்.எண்.130/2026 ல் தாக்கலான வழக்கு சொத்தான TN 79 H 1812 என்ற பதிவெண் கொண்ட Pulsar 125 DST–1 இருசக்கர வாகனத்தை மனுதாரருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>** :–

1. மனுதாரர் ரூ.60,000/–க்கு தான் சொந்த பிணை பத்திரமும், மேலும், இரு நபர்கள் தலா ரூ.60,000/–த்திற்கு பிணைப் பத்திரமும் எழுதி தர வேண்டும்.
2. வழக்குச் சொத்தினை 4 கோணங்களில் புடைப்படம் எடுத்து, குறுந்தகடுடன் தாக்கல் செய்ய வேண்டும்.
3. நீதிமன்றம் வேண்டும் போதும், விசாரணையின் போதும் மேற்படி சொத்தினை ஆஜர்படுத்த வேண்டும்.
4. வழக்குச் சொத்தினை குற்ற செயலுக்கு உபயோகப்படுத்தக் கூடாது.
5. மேற்படி வழக்குச் சொத்தினை **Judicial form No.82 in order to Rule 257(1) of criminal rules of practice 2019** ன் படி பஞ்சநாமா தயார் செய்து இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் மார்ச் திங்கள் 17 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI
Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.17 16:21:39 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.